
# BONDIL SENA

## RAJADESINGH RAJPUT BONDIL SENA

Malar 01

Malarndhadhu 2022 - 2023





# Bondil Sena Executives



# Executive Members





## வாழ்த்துகள்

இந்தியநாட்டின் பிரதமராக
பொறுப்பேற்று சிறந்த
ஆட்சி நடத்தும் மாண்புமிகு
இந்திய பிரதமர்

**திரு. நரேந்திர மோடி**

அவர்களுக்கும் மற்றும்
அவருக்கு உறுதுணையாக
செயல்படும்
அமைச்சர்களுக்கும்
நாடளுமன்ற
உறுப்பினர்களுக்கும்
**ராஜாதேசிங் ராஜ்புத்
பொந்தில் சேனாவின்**
மனம் நிறைந்த
வாழ்த்துகள்.



## வாழ்த்துகள்

தமிழ்நாட்டின் முதல்வராக
பொறுப்பேற்று சிறந்த ஆட்சி
நடத்தும் மாண்புமிகு தமிழக
முதல்வர்

**திரு. மு.க.ஸ்டாலின்**

அவர்களுக்கும் மற்றும் அவருக்கு
உறுதுணையாக செயல்படும்
அமைச்சர்களுக்கும் சட்டமன்ற
உறுப்பினர்களுக்கும் **ராஜாதேசிங்
ராஜ்புத் பொந்தில் சேனாவின்** மனம்
நிறைந்த வாழ்த்துகள்.

எங்களின் ராஜ்புத் சமூகத்தை சேர்ந்த முன்னாள் பிரதமர் தெய்வத்திரு.**விஷ்வநாத் பிரதாப் சிங்** அவர்களுக்கு திரு உருவ சிலை சென்னை மாநகரில் அமைக்க ஏற்பாடு செய்துள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் திரு.முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு எங்கள் ராஜா தேசிங் ராஜ்புத் பொந்தில் சேனாவின் சார்பாகவும் எங்கள் சமூகத்தின் சார்பாகவும் வாழ்த்தி நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

# ராஜாதேசிங் ராஜ்புத் பொந்தில்சேனாவின் துவக்கம்



செஞ்சியை ஆண்ட வீர மன்னன் ராஜாதேசிங்கின் 330வது ஆண்டு பிறந்த தின விழா 27.04.2022 அன்று விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

செஞ்சிக்கோட்டையில் அமைந்துள்ள வெங்கடரமணர் கோயிலில் ராஜா தேசிங் அவர்களின் பெயரில் அர்ச்சனை செய்து, ராஜாதேசிங் ராஜ்புத் பொந்தில் சேனா என்ற புதிய அமைப்பினை ஒசூரை சேர்ந்த திரு.**G.ஸ்ரீதர்சிங்** அவர்களின் முன்னிலையில் துவக்கினார்கள்.

இதில் பல மாவட்டத்தை சேர்ந்த ராஜாதேசிங் வம்சாவழியினர் கலந்து கொண்டு சிறப்பிதனர்.

**முதல் நிகழ்ச்சியாக**

செஞ்சி கடலியில் அமைந்துள்ள ராஜாதேசிங் நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தி வழிபட்டனர்.

பின்னர் அங்கு அமைந்துள்ள அரசாங்க பள்ளியில் படிக்கும் மாணவ மாணவியருக்கு நோட்டு புத்தகம் எழுதுபொருட்கள் மற்றும் இனிப்பு வழங்கினர்.

மேலும் அப்பகுதியின் அருகிலுள்ள மேலச்சேரி என்ற கிராமத்தில் வசிக்கும் ராஜா தேசிங் வழிவந்த பொந்தில் சமூகத்தினரை நேரில் சந்தித்து ஏழை எளியோருக்கு பிறந்தநாள் பரிசுகளை வழங்கி மகிழ்ந்தனர்.









**இந்நிகழ்ச்சியில்,**

சென்னை, மதுரை, பெங்களூர், ஒசூர், தாம்பரம், கள்ளக்குறிச்சி, மேலச்சேரி, செஞ்சி, பன்ருட்டி, நாமக்கல், தென்காசி, ராணிப்பேட்டை, திருப்பத்தூர், வாணியம்பாடி, விழுப்புரம், உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து திரளாக வந்து கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




◆ with Best Compliments ◆



## ராணிபாய் நினைவு நாள் அனுசரிப்பு



நம் குலதெய்வமான **கற்புக்கரசி மகாராணி ராணிபாய்** அவர்களின் நினைவு நாள் இந்நாளில் காலை சுமார் 10 மணியளவில் செஞ்சி பேருந்து நிலையத்திலிருந்து செட்டி குளம் தகன மேடை வரை ஆட்டோ மற்றும் இருசக்கர வாகனங்களில் ஊர்வலமாக சென்று அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் ராணி பாய் அவர்கள் உடன்கட்டை ஏறி தன் இன்னுயிரை நீத்த இடமான ராஜா தேசிங்கு அவர்களின் தகன மேடையில் பூஜைகள் செய்து கற்புக்கரசி மகாராணி ராணிபாய்க்கு நினைவஞ்சலியும் மௌன அஞ்சலியும் செலுத்தும் நிகழ்ச்சி நம் சேவா சேனா சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ராணி பாய் அவர்கள் உடன்கட்டை ஏறி உயிரை மாய்த்துக் கொண்ட தகன மேடையில் இதுவரை வரலாற்றில் நம் சமுதாய சங்கங்கள் செய்யாத பணியை ராஜா தேசிங் ராஜ்புத் பொந்தில் சேனா புரோகிதரைக் கொண்டு (ஷராத்) திதி செய்தது என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறோம்.



இந்நிகழ்ச்சியில் தமிழ்நாட்டில் உள்ள ராஜபுத்திர வம்சாவழியை சேர்ந்த அனைவரும் கலந்துக்கொண்டு நம் குல பெருமையை காத்தனர். முக்கியமாக அனைத்து ராஜபுத்ர பெண்களும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

நன்றி

Dear Bondiliyars/ Rajputs,

We the **Raja Desingh Rajput Bondil Sena** invited to attend the Historical Ceremony of Maha Rani Ranibai's sacrifice Day on 9th of October 2022 at Gingee Chettikulam. This is the Historical First time in our Community. Raja Desingh Rajput Bondil Sena is performed sharath(Thithi) at 10.30AM at Gingee Chettikulam to our Anchestor Maharani Ranibai and our Maharaj Raja Tej Singh. Thank you.

**Raja Desingh Rajput Bondil Sena.**

# ராஜாதேசிங் படத்திறப்பு விழா

ராஜா தேசிங் அவர்களின் உண்மையான உருவப்படம் மைசூர் அருங்காட்சியகத்தில் 330ஆண்டுகளுக்குப் பிறகு சேனாவின் தலைவர் திரு நாகேஷ்வரசிங் அவர்களின் பெரும் முயற்சியால் பெறப்பட்டு.

ஒசூரில் 01.10.2022அன்று சேனாவின் நிர்வாகிகளால் திறந்து வைக்கப்பட்டது

அதே நாளில் ஒசூரில் தலைமை அலுவலகமும் திறந்து வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது..












சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் நம் அனைவரின் கடமை!

ஏழை பணக்காரர்கள் என்ற பாகுபாடு இல்லாமல் இருக்க பாடுபட வேண்டும் என்பது சேனாவின் நோக்கம். இந்த விதை இன்று விதைக்கப்பட்டுள்ளது இனி கனிகள் வரும் வரை காத்திருப்போம்!!

**வெட்டிக் களைகளை கிள்ளி எறிவோம்!**

**வெற்றிக் கனிகளை பறித்து உண்போம்!!**



**G. ஸ்ரீதர் சிங்**
நிறுவனர்

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வு என்பதை மனதில் வைத்து, நம் இனத்திற்காக நம் சந்ததிகளுக்காக நம் தாய் தந்தைகளுக்காக இந்த தாய் நாட்டிற்காக நமக்காக நாம் ஏதாவது செய்தே ஆக வேண்டும் என வீரனடை போட்டால்

வெற்றி நமக்கே சொந்தமாகும். இளைய தலைமுறையே எழுச்சிக் கொள், இனி எதிரிகள் உனக்கில்லை மனதில் கொள், நம் நம் சமுதாயம் காத்திட துணிந்து நில்

புதிய சரித்திரம் படைத்திட சபதம் கொள், அப்துல் கலாம் ஐயா அவர்கள் கூறியதைப் போல் பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம், ராஜபுத்திரர்களின் இறப்பு சரித்திரமாக மட்டுமே இருக்க வேண்டும் என்னைப் பெற்ற தாய் தந்தைக்கும் என் சமுதாய மக்களுக்கும் என்றும் நன்றியுடன் இருப்பேன்.

நன்றி !

## Know About Rajputs



**B.Mayurini Singh**
**Chennai**

Rajputs are born to win
And make wonders,
Not to lose And Become a loser
Rajput Girls are not Just Brave & Bold,
They are Wise too
Rajputs are like Rockets They always travel in Forward Direction
And never in reverse
Reel Heroes are seen oftenly, But,
The Real Heroes are seen Rarely
They are only Rajputs.
Rajputs are not just brought up as Warriors They are born as Warriors.

# தலைவர் கடிதம்

**ஓம்! நமசிவாய!! என் ராஜபுத்திர ரத்த பந்தங்களுக்கு வணக்கங்களும் வாழ்த்துக்களுடன்...**

நாம் ராஜா தேசிங்கு ராஜ்புத் பொந்தில் சேனா– துவங்கி ஒரு ஆண்டு காலம் நிறைவின் நிறைவை பார்க்கின்றோம். இந்த சேனாவின் துவக்க நோக்கமும் நாம் அதில் கடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்க உங்களை நான் அழைக்கின்றேன். தமிழகம் முழுதும் பரவி கிடக்கும் நம் ராஜபுத்திர ரத்த பந்தங்கள் தகுந்த ஒற்றுமையும் ஒருவரை ஒருவர் அன்புடனும் ஆதரவுடனும் மரியாதையுடனும் ஒற்றுமையுடன் இருக்கின்றோமா ?.

இந்த விதத்தில் எத்தனை பேர் எப்படி இணைந்திருக்கிறோம் எந்த லட்சியத்திற்காக பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு விதமாக சங்கங்கள் தோன்றின ஒவ்வொன்றும் ஒரு காலகட்டத்தில் யாராவது ஒருவர் தன்னை முன்னிறுத்திக் கொண்டு இதன் புகழ் பாராட்டு வளர்க்க தம் லட்சியங்களையும், இந்த சங்கங்களையும் பயன்படுத்த ஆரம்பித்தன. அதன்விளைவு, ஸ்தம்பித்துப் செயல்பாடின்றி நின்றுபோன நிலையில்.

நாம் இந்த ராஜா தேசிங் ராஜ்புத் பொந்தில் சேனாவை ஆரம்பித்தோம் சமூகத்தில் ஏற்றத்தாழ்வு பணக்காரன் ஏழை படித்தவன் படிக்காதவன், இருப்பவன் இல்லாதவன் செல்வாக்கு உள்ளவன் செல்வாக்கு இல்லாதவன் இப்படி பல விதத்திலும் வேறுபாடுகள் இடையே ஒரு சமத்துவம் வேண்டி சகோதரத்துவம் ஒற்றுமை பெற அதற்குரிய விலை சகிப்புத்தன்மை, அன்பும், மரியாதையும், இவை இல்லாமல் இன்னொன்றும் உண்டு தன்னலமற்ற ஈடுபாடுடன் குலத்திற்கு சேவை செய்வது இவற்றைப் பெற்றால் தான் அந்த உயரிய தூய அற்புதமான ஒரு நிலையை அடைய முடியும். **இந்த உண்மையை உணர்த்த தான் சகோதரர் ஸ்ரீதர் சிங் பையா இந்த ராஜா தேசிங் ராஜ்புத் பொந்தில் சேனாவை ஸ்தாபனம் செய்தார்.** எல்லா ராஜபுத்திரகளும் குலத்திற்கு தொண்டு செய்ய ஒரு மேடையாக செயல்பட வழிவகுத்தார்.

பெரும் கட்டிடங்களிலும் பஃபெட் சாப்பாடுகள் தருகிறேன் வாருங்கள் என்று கூறாமல் நம் குல மக்கள் எங்கெங்கே இருக்கிறார்கள் என பல கிராமங்களுக்கு நேரடியாக சென்று மேலச் சேரி, செஞ்சி, ராணிப்பேட்டை, துத்திப்பட்டு, திருச்சி, மதுரை என ஒன்றை அடுத்து ஒன்றாக கிளைகள் கூடிக் கொண்டே போகிறது இந்த பட்டியல். இது ஒரு தானாக சேர்ந்த கூட்டமாகும். இதே ஆண்டில் செஞ்சியில் நினைவிடங்களும் ராணிப்பேட்டையில் நினைவிடங்களுக்காக தமிழக அரசையும், அரசைசார்ந்த அமைச்சர்களும், ஆட்சியர்களையும் இடைவிடாமல் வலியுறுத்திக் எல்லா ராஜபுத்திரகளின் கனவையும் நனவாக்கி கொண்டிருக்கின்றோம். இதற்கிடையில், நம் குலவிளக்கு ராஜா தேசிங்கு தகன மேடையில் ஒரு மஹா சாந்தி ஹோமம் நடத்தி இந்த வீர மகனுக்குக்கும்

ராணிபாய்க்கும் நினைவு அஞ்சலி மரியாதை செலுத்தினோம். ராணிப்பேட்டையில் பூஜைகள் நடத்தி உண்மையான உணர்வு ஊட்டுதல் என்கிற பணியை இறைவன் அருளால் சீராகவும் செம்மையாகவும் நடந்தது. இனி வரும் காலங்களில் மேற்கூறியபடி இது தொடரும்.

நம் இந்த முப்பெரும் விழா முன்னிட்டு அழகான வண்ண மலரை வெளியிடுவதற்கு அரும்பாடுபட்டு சாதனைக்குரிய இந்த மலரை உருவாக்கிய நம் பொதுச் செயலாளர் **திரு.ஸ்ரீதர்சிங்** மற்றும் **திரு.பாலாஜிசிங்** அவர்களுக்கும் தனிப்பட்ட பாராட்டுகளும் மனமார்ந்த வாழ்த்துக்களையும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தின் ஒவ்வொரு ராஜபுத்திரர்களும் எப்படி தங்கள் குலதெய்வத்திற்கு வழிபாடு செய்கிறோமோ அதன் தொடர்ச்சியாகவும் குலசேவையும் செய்து இறை அருளும் இயற்கை அருளும் பெற்று பெருவாழ்வு வாழ வேண்டும் என எல்லோரையும் கேட்டுக்கொள்கிறேன். மேற்கூறிய கடும் சாதனைகளுக்கு அரும்பாடுபட்ட முக்கிய நிர்வாகிகளான தாம்பரம் **ரவிச்சந்திர சிங் ஜி, சோபா ராணி பாய், ஜி பாலாஜி சிங் ஜி, யஷ்வந்த் சிங் ஜி, நிர்மலா ஜி, ஜகதீஷ்வர் சிங், பன்ருட்டி ராஜேஷ் சிங் ஜி, செஞ்சி ஜெய் சிங்ஜி, தேசிங் ஜி ராணிப்பேட்டை, சுரன்சிங் ஜி இ குரு சிங் ஜி, பிரகாஷ் சிங் ஜி தென்காசி மோகன் சிங் ஜி** அவர்கள் இதே போன்ற மற்ற ஏனைய மாவட்ட தலைவர்களுக்கும் மாவட்ட நிர்வாகிகளுக்கும் **தன்னை முன்னிறுத்தி கொள்ளாமல் சுயநலம் பாராமல் உழைக்கும் உயர்ந்த உள்ளங்களான** தாம்பரம் **திரு.இந்திரன்சிங்** சென்னை, **ஜெய்குமார்சிங்.** பல்லாவரம் **ஜெயசந்திரசிங்** இது போன்ற மேலும் பலருக்கும் இந்த இயக்கத்தில் இயங்குகின்ற அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் நன்றி பாராட்டி இறை அருளுடன் கூடிய வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.




**உங்கள மணைவி / கணவர் மற்றும் குழந்தைகள் / பேரகுழந்தைகள் மீது பாசம் உள்ளவர்களா நீங்கள்? அவர்கள் எதிர்காலத்தை பற்றி சிந்திக்கிறீர்களா? உங்கள் பணி ஓய்விற்க்கு பிறகு ஓய்வூதியம் கிடைத்தால் நன்றாக இருக்கும் என நினைப்பவரா இவை அனைத்திற்க்கும் தீர்வு காண எங்களை அணுகவும். உங்கள் வயது மற்றும் வருமானத்திற்கேற்ப்ப திட்டங்கள்/வழிமுறைகளை நாங்கள் உங்களுக்கு அளிக்கிறோம். அச்சம் தவிர்த்து குடும்பதினரின் பாதுகாப்பு மற்றும் மகிழ்ச்சிக்காக இன்றே செயல்படுங்கள் வருமான வரியை சேமிப்பு நிதியாக மாற்றி பயனடையலாம். உங்களுக்கு உதவி செய்ய காத்திருக்கும் எங்களை கீழ் காணும் எண்ணில் அழைத்திடுங்கள்.**

**ராணி : 8148919068**

# துணை தலைவர் கடிதம்

அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய நம் சமுதாய உறவுகள் அனைவருக்கும் வணக்கம்!

நம் சமுதாய மக்களுக்கு (எவ்வித பாகுபாடும் இல்லாமல்) சேவை செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு, நமது ஆற்றல் மிக்க செயல் வீரர், சங்க வழிகாட்டி மதிப்பிற்குரிய திரு.**G.ஸ்ரீதர் சிங்,** ஓசூர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது தான் இந்த சேனா அமைப்பு. சேனா ஆரம்பித்து ஒரு வருடத்தில் நடந்த ஒவ்வொரு விழாவிலும் பொருளாதாரத்தில் நலிந்த குடும்பங்களுக்கு நம்மால் இயன்ற உதவிகளை செய்துள்ளோம்.

மேலும் மருத்துவ உதவிக்கான நிதியை திரட்டி உரிய நபர்களுக்கு சரியான தருணத்தில் உதவியுள்ளோம் வரலாற்றில் இதுவரை எந்த ஒரு சங்கமும் யோசித்துக் கூட பார்த்திராத ஒரு செயலை அதாவது அக்டோபர் மாதத்தில் குலமாதா ராணிபாய் நினைவு நாள் அன்று நம் குல தெய்வங்களான ராஜா தேசிங் மற்றும், மகாராணி ராணி பாய் அவர்களுக்கு செஞ்சியில், புரோகிதர்களை வைத்து முறைப்படி திதி கொடுத்தது சேனாவின் பெருமைகளுக்கு முத்தாய்ப்பாய் அமைந்தது.

மேலும் அன்று பெருந்திரளான மகளிரை ஒன்று திரட்டி பேரணி மற்றும் யாகத்தில் கலந்து கொள்ள செய்த பெருமை சேனாவிற்கே சேரும் அதில் மகளிரணி யின் பங்கு மிகவும் பாராட்டிற்குறியதாக இருந்தது ஜனவரியில் மரபு நடை விழாவிற்கு அரசு நம்மை அழைத்து பெருமைப்படுத்தியது நம் சேனாவிற்கு கிடைத்த மிகப்பெரிய கௌரவம் என கர்வத்தோடு கருதுகிறேன்.

நம் சமுதாய கோரிக்கைகளை நிறைவேற்ற அரசு அதிகாரிகளை சந்தித்து மனுக்களை சமர்ப்பிப்பதில் மற்றவர்களுக்கு முன்னோடியாய் விளங்குகிறது சேனா அத்தனை பெருமைகளும் கௌரவமும் சேனா அடைய காரணம் அதன் அனைத்து நிர்வாகிகளின் ஓயாத உழைப்பும், ஒற்றுமையும், சேவை மனப்பான்மையும் மட்டுமே, துவக்கப்பட்ட குறுகிய காலத்தில் சேனா செய்துள்ள பல விஷயங்களை எண்ணி பார்க்கவே மனம் நிறைவடைகிறது

வருங்காலத்தில் சேனா தன் திறமை மிக்க நிர்வாகிகளுடன் இணைந்து மேலும் பல சாதனைகளை படைத்து மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக திகழும் காழ்ப்புணர்ச்சி பொறாமை மற்றும் எதிர்மறை எண்ணங்கள் கொண்ட சிலரது பிரித்தாளும் சூழ்ச்சியின் காரணத்தால் பல வகையான எதிர்ப்பு, நிராகரிப்பு, வலி, அவமானங்களையும் கடந்த தனித்திறமை மற்றும் சேவை மனப்பான்மை உடைய நிர்வாகிகளை கொண்டு உருவான சேனா மேலும் பல சாதனைகளை படைக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை ஒன்று படுவோம் வெற்றி பெறுவோம்



நன்றி! வணக்கம்!!

**சோபா ராணி பாலாஜி சிங்**
மாநில துணை தலைவர்
மற்றும் மகளிரணி ஒருங்கிணைப்பாளர்

# பொருளாளர் கடிதம்


அனைத்து ராஜபுத்ர பொந்தில் சமுதாய உறவினர்களுக்கு ராஜா தேசிங் ராஜ்புத் பொந்தில் சேனாவின் பொருளாலராக எனது அன்பு நிறைந்த வணக்கத்தையும், வாழ்த்துகளையும் தெரிவித்து மகிழ்கிறேன்.

நமது ராஜா தேசிங் ராஜ்புத் பொந்தில் சேனா 27.04.2022 அன்று நம் பெருமைக்கும், போற்றுதலுக்கும் உரிய வீரனும், ஷத்ரிய குல பொந்தில் சமுதாய மன்னரும், செஞ்சி புகழ் வேந்தனும், **சரித்திரப்புகழ் இளங்காளையுமான ராஜ்புத் ராஜா தேசிங் அவர்களின் 330ஆம் வருட பிறந்த நாளன்று** அவர் வழிபட்ட வெங்கட ரமணர் திருக்கோயிலில் பிறந்ததே பொந்தில் வீரர்களின் சேனா.

**ராஜா தேசிங் ராஜ்புத் பொந்தில் சேனா பிறந்ததின் நோக்கமாவது:**

1. நம் குல பெருமை காத்த தேசிங் ராஜாவின் புகழ் காக்கவும், அவரது சரித்திரம் சரியாமல் நிலைத்து நிற்க செஞ்சியில் சிலையும், மணிமண்டபமும் அமைத்திட போராடுவோம்.
2. ராணிபேட்டையிலுள்ள ராஜா தேசிங், ராணிபாய் நினைவுத் தூன்களை சீரமைத்து பராமரிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்வோம்.
3. பின் தங்கியுள்ள நம் சமுதாயத்தை முன்னேற்றத்திற்கான வழி காண்போம்.
4. நம்மிடமுள்ள பிரிவினைவாதிகளின் சக்தியை வலுவிழக்கச் செய்து நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம்.
5. நம் மொழிமீது அக்கரை கொண்டு எதற்காகவும் விட்டுக்கொடுக்காமல் நம் மொழி மீது பற்றுகொண்டு நம் சமுதாய உறவுகளிடம் நம் மொழியில் பேசி பழகிடுவோம். நம் வருங்கால சந்ததியினரும் நம் மொழியை பின் தொடரட்டும்.

இது நாள் வரையிலும், இன்னும் வருங்காலங்களிலும் எங்களோடு இணைந்து சேனாவிற்காக பணியாற்றும் அத்துனை உறவுகளுக்கும்



நன்றி! நன்றி!! நன்றி!!

ராஜா தேசிங் ராஜ்புத் பொந்தில் சேனாவின் பொருளாளர்
**பாலாஜி சிங். ஜி.**

## ராஜாதேசிங் வரலாறு ராஜா தேசிங்கு வீர சொர்கம்

**மறைந்தது உன் உடல் மறையாது உன் புகழ் தேசிங்கு ராஜாவே!**
**மறைத்ததே பெருமையா கொண்டது இந்த மண் தேசிங்கு ராஜாவே!!**
**மறைத்த மேகங்கள் எங்கே உன் சுத்த வீரத்தை தேசிங்கு ராஜாவே!!!**
**மறைக்க விடுமோ உன்னை கொண்டாடும் சேனா தேசிங்கு ராஜாவே!!!!**

இந்த வீரனின் கதை தேசிங்கு ராஜாவின் செங்கோல் பார்த்ததோ பத்து திங்கள் தான் ஆனால் அவன் புகழ் கடந்து நின்றது 3 நூற்றாண்டுகளையும் கடந்து. அந்நியர்களும், பிரன்சு வீரர்களும் அவன் பாடலை பாடி மகிழ்ந்தனர். அவன் புகழ் புவி இருக்கும் வரை நிற்கும். செஞ்சி கோட்டை மூன்று மலைகளின் மீது இயற்கையை அறணாக கொண்டு தமிழர்களின் ஒப்பற்ற கோட்டை கட்டும் கலையை கொண்டு பல மன்னர்கள் சரித்திர ஆசிரியர்கள் வியந்து பாராட்டு பெற்ற பலமான கோட்டை யாக திகழ்ந்தது.

17 ஆம் நூற்றாண்டின் முடிவு பதினெட்டாம் நூற்றாண்டின் துவக்க காலத்தில்இ சீர்மிக மிகப்பெரிய நகரமாக திகழ்ந்த செஞ்சியில் நிகழ்ந்தது பாதுஷா அவுருங்கஜீப் ஆணையின் பேரில் –“ஜுல் ஸ்பீக்கர் கான்” என்னும் நவாபு செஞ்சி கோட்டையை கைப்பற்ற 1693 இருந்து போர் நடத்திக் கொண்டிருந்தான். அங்கு நாயக்கன வம்சாவளியினரை அகற்றி மராத்திய மன்னர் ராஜாராம் ஆட்சி நடத்திக் கொண்டிருந்தார் .

ராஜா ராம் மீது போர் தொடுத்து ஏழு ஆண்டு காலமாக போர் தொடுத்து போர் தொடுத்து கைப்பற்ற முடியாத நிலையில் பாதுஷா அவுரங்கஜிப் ஜுல் பிகர் கானுக்கு துணையாக பிரிவுகளுடன் படை தளபதிகள் பத்து பேரை அனுப்பி வைத்தார். முக்கியமானவர் சுரூப் சிங் மேம் குறிப்பிட தகுந்தவர் ராணி மங்கம்மாள் மதுரை நாயக்கர் வம்சாவளி சேர்ந்தவர்.

செஞ்சி கோட்டை முகலாய வசம் அடைந்ததை முன்னிட்டு முகலாய பாதுஷா அவுரங்கஜிப் அவர்கள் தர்பாரில் ஒரு பார்மான – அரச ஆனை மூலமாக சுரூப் சிங்க்கு அவருடைய போர் புரியும் ஆற்றல், போரில் செய்த சாதனைகளுக்கும், அவருடைய போர்கள சேவைக்கு அங்கீகாரம் தரும் வகையில் 2000 மன்ஸ் தங்கமும், 12000 ரூபாய்க்கு சமமான ஜாகிர்களும் மற்றும் கில்லாதாரி என்கிற பதவியும் – பொறுப்பும், 1200 பரகணாகளும் செஞ்சி வழுதாவூர் திண்டிவனம் திருவாமத்தூர் திருக்கோவிலூர் வெட்ட வாணி தேவனாம்பட்டினம் அடங்கிவற்றை சில படை பிரிவுகளும் சுரூப் சிங்க்கு அளித்தார். மேதகு முந்தேலா ராஜபுத்திர ராஜா சொரூப் சிங் கிட்டத்தட்ட 14 ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். சுரூப் சிங் இன் தந்தை மித்ரா சென் தாத்தா சந்திரபோன் முத்தாத்தா நர்சிங் ஆவார். இவர்கள் பாதுஷா தர்பாரில் பிரபுகளாக அங்கம் வகித்தனர் .

கிட்டத்தட்ட 14 ஆண்டு கால ஆட்சி பொன்னெழுத்துக்களால் எழுதலாம் இவர் காலத்தில் எதிரிகள் யாரும் எதிர்த்து வரவில்லை பரங்கியரான ஆன ஈஸ்ட் இந்தியா கம்பெனி வியாபாரத்திற்காக வந்தவர்கள் இவர்களை அந்த அளவிலேயே இடம் கொடுத்து இருக்க வேண்டும் என கொள்கை வகுத்து மீறுபவர்களை சிறைபிடித்து தண்டனை வழங்கி அந்நியர்களை அடையாளம் கண்டு அடக்கினார். ஈஸ்ட் இந்தியா கம்பெனி ராஜா சுரூப் சிங் மற்றும் ராஜா தேசிங் அவர்களின் கால காலத்தில் அதாவது 14 ஆண்டு காலம் 1700 இல் இருந்து 1714 வரை 14 முடியும் வரை வெள்ளையர்களுக்கு சிங்க சொப்பனமாக இருந்தனர். இந்த நிலை இவர்களுடைய பயத்தையும் அவர்கள் தங்களுடைய தலைமைக்கு அனுப்பிய கடிதங்கள் மூலம் தெளிவாக விவரமாக எடுத்துக் காட்டப்படுகிறது. பிரான்ச் காரர்களின் ஆதிக்கத்தில் பாண்டிச்சேரி இருந்தது இ பிராண்சு காரர்கள் இந்துக்களுக்கு எதிராக பயங்கரமான அடக்குமுறை நடத்தினர் உதாரணமாக நாயிறு கிழமைகளில் மற்றும் அமாவாசை நாட்களிலும் ஹிந்துக்கள் எந்த நிகழ்ச்சிகள் நடத்துவது பகிரங்கமாக வெளியிட, பொதுயிடம்களிலோ தடை செய்யப்பட்டது மேலும் இது மரண ஊர்வலங்களுக்கும் சடங்குகளுக்கும் பொருந்தும்: இந்த சட்டம் செஞ்ஜியில் ராஜபுத்திர இருந்தவரை பயந்து நிறுத்தப்பட்டு இருந்தது இ அவர்களுக்கு பிறகு உடனடியாக இது இந்த கடுமையான ஹிந்துக்களுக்கு எதிரான அடக்குமுறை சட்டம் தலைவிரித்து ஆடியது .மன்னர் சுரூப் சிங 1713 டிசம்பர் அல்லது 1714 ஜனவரியில் இயற்கை எய்தினார் பீஷ்ம பிதாமகானாக திகழ்ந்தார் என சரித்திர பேராசிரியர்கள் அடையாளம் காண்கிறார்கள்.

நாட்டின் அரசியல் பாதுசா அவுரங்க ஜிப் அவர்கள் 1706 இல் அவருடைய 90 வது வயதில் காலமானார் அடுத்து ஏழு ஆண்டுகளில் அவருடைய மூன்று மகன்களும் ஒழிந்து கடினமான பாதுஷா ப்ரூக் ஷைர் ஆட்சிக்கு வந்தார்.

டெல்லி பலகீனமடைந்த நிலையில் இருந்ததால் கர்நாடகா அரசியலில் மிகப்பெரிய மாற்றங்களையும் தீவிர முடிவுகளையும் ஏற்படுத்தியது. பல கோட்டைகள் இநவாபுகள் சுதந்திர இச்சையுடன் செயல்பட்டனர்.

சதாவுதுல்லா கான் தன்னுடைய அதிகாரத்தை அதிகப்படுத்த விரும்பி செஞ்சியை கைப்பற்ற நினைத்தான் அங்குள்ள புங்தேலீயர்களை அகற்றி தன்னுடைய சொந்தக்காரர்களை அமர்த்த எண்ணினான் இதை முன்னிட்டு பெரும் தொகை எழுவது லட்சம் ரூபாய் வரி பாக்கி என்ற குற்றச்சாட்டும் வரி கட்ட வேண்டும் என்று நிபந்தனையும் விதித்தான் அவன் தன்னைப் பற்றிய நினைத்தானே தன்னுடைய அதிகார வரம்பை பற்றி நினைத்தானே தவிர நாட்டின் அரசியல் சூழ்நிலையை அதிகமாக கவனித்ததாக தெரியவில்லை தஞ்சாவூர் மதுரை ஆட்சிகளின் மீதும் கவனத்தை செலுத்தினார் இந்த நேரத்தில் பல பாளையக்காரர்களும் தம் நிலைகளில் தளர்வுடன் இருக்க ஆரம்பித்தனர் .

## ராஜாதேசிங் பராக்கிரமம்

பாதுஷா ஷாஆலயம் அடங்காத குதிரையை அடக்க சவால்விட்டு போட்டி வைத்தார்.

போட்டிக்குரிய குதிரை போருக்குறியவை அதிலும் பாதுஷாக்களின் குதிரைகள் முக்கியமாக அரேபிய நாட்டின் மிகச்சிறந்த ஜாதி வகை சேர்ந்தது அது பல போர்கள் கண்ட அனுபவம் கொண்ட போர் வீரர்களால் கூட அடக்க முடியவில்லை. ஒரு 14 வயது இளைஞன் ராஜா தேசிங் அதை அடக்கி பல பரிசுகள், பலரின் பாராட்டுஇ தந்தையின் விடுதலை, ஒரு அரச குலமகளை தனக்கு மணமகளாக பரிசு பெற்றார்.

அவர் அவரின் 21 வது வயதில் நோயுற்ற தன் தந்தையை காண வரும் வழியில் தந்தையின் நண்பர் பேடூர் மன்னர் தன்னுடைய ஆட்சிக்கு ஆபத்து என படை மற்றும் ராணுவ நடவடிக்கை உதவி கேட்டார். ராஜபுத்திர மரபையொட்டி கலகம் செய்த படை தலபதிகளை கடுமையாக தாக்கி அடக்கி மன்னருக்கு பாதுகாப்பு அளித்தார் பேடூர் மன்னர் பல பரிசுகள் ஒரு லட்சம் ரூபாய் பொன் மேலும் ஒரு குதிரை இஅந்த குதிரை 1714 இல் அதனுடைய விலை 12000 பொன் அதை பாரா ஹஜாரி எனும் பேரிட்டனர் அதை பரிசாக கொடுத்தார்.

சதாத்துல்லா கானின் திட்டங்களின் பெயரில் ராஜா தேசிங்கு நிலைப்பாடு.

## ராஜா தேசிங் தன் நிலை:

பகுதிகளான திருவண்ணாமலை திருக்கோவிலூர் வட்ட வாணி திண்டிவனம் தேவனாம்பட்டினம் போன்ற பாலய்க் காரர்கள் ஒத்துழையாமைஇ கட்டுப்பாட்டில் இருந்து விலகி நின்ற நிலைஇ பல அரசியல் வியூகங்களுக்கு இடம் கொடுத்தனஇ மேலும் கவர்னர் அதாவது கில்லாதார் பதவியும் கோட்டடைய்யை கைவிடுமாறும் அவருக்கு 5000 குதிரைகளின் படை அவருக்கு வழங்கப்படும் என்றும் தன்னிடம் வந்து சேரும் படியும் திட்டமளித்தார். இதான் சமாதானமாக போக வேண்டுமானால் ஒன்று அரசுகஜானா முற்றிலும் காலியாக்கி ஆற்காடு நவாப்புக்கு தர வேண்டும். செஞ்சிக்கு அண்டி இருக்கும் திருவண்ணாமலை திருக்கோவிலூர் போன்ற நாடுகள் சந்தர்ப்பவாதிகளாக மாரி நவாபுடன் தகுதியற்ற கூட்டு தான் தஞ்சாவூர் மதுரை ஆட்சிகளை படையெடுக்க கட்டாயப்படுத்தப்படுவோம். பாண்டிசேரியில் பிரண்ட்ஸ் காரர்களை போல் நாட்டில் ஹிந்துக்களின் மேல் அடக்குமுறை ஏவப்படும் தலை தூக்கி விடும். தாமும் தன்னுடைய மனைவி மக்கள் ஆகியோருடன் சுகபோகம் குறையாது செல்வ செழிப்புடன் வாழலாம் நவாபின் எதிர்த்தால். மிக பலமான கோட்டையில் சில வருடங்களுக்கு கோட்டையில் பத்திரமாக இருந்து வாழ்ந்து கொள்ளலாம். ஆனால் நவாபீன் பல்லாயிரக்கணக்கான படைகளுக்கு இடையே மக்கள் மிகவும் நசுன்க்கபடுவர். செஞ்சி மாநகரம் அதனுடைய ஆட்சி வட்டம் சுருங்கிவிடும் .

இந்த நிலையில் தெய்வத்திருமகனின் திருவுள்ளத்தில் திண்டிவனம் திருவாமத்தூர் திருக்கோவிலூர் வெட்ட வாணி தேவனாம்பட்டினம் அகியவை சந்தர்ப்பவாதிகளாயின மாற்றவோ நம்பவோ முடியாது, நம் முடிவினால் மக்கள் நசுங்குவர் துன்பரபபடுவர் தன்னை நம்பிய படை சீரழியும். இப்போது இத்தனைக்கும் காரணமும் தீர்வும் ஒன்று தான். ஒன்று நவாப் சதவுத்துல்லா கான் அல்லது தான் வீழ வேண்டும்.

திருமணம் முடிந்தும் தந்தை பெரியோர் சொல் கேட்டு மனைவியிடம் அவை கட்டுப்பாட்டுடன் வாழ்ந்த ஒரு கட்டுப்பாடு உடையவர். தினமும் தினமும் வெங்கட்ராமனரை வழிபடும் சிறந்த வைஷ்ணவர் 7 ஆண்டுகள் போராடினாலும் நுழைய முடியாத பலமிக்க கோட்டையின் தலைவனாக இருந்தும் எதிரி வாசலில் வருகிறான் என்றால் முதலில் எதிரியை கொள் என் வீரமிக்க சிந்தை உடையவன் மனைவி ராணி பாய் விடைபெறும்போது ஏழு ஆண்டுகளானாலும் எதிர்கலால் நுழையும் முடியாத ஒரு பெரும் கோட்டையில் இன்று போருக்கு போக வேண்டுமா என்று மன்றாடி கேட்டாலும் எதிரியை எதிரில் வைத்துக்கொண்டு நான் நேரம் வாங்குவது சரியில்லை என வீரம் பாராட்டிய வீர மகன். இங்கு உயிர் துச்சம் மானம் தான் பெரியது இனியது என அங்கு வீர வேள்வியும் தன்னை பலியாக தன் கையில் வால் ஏந்தி பல்லாயிரக்கணக்கான பலவகை பல படைகள் கொண்ட எதிரிகளின் போர் படையை மோதினான் நவாபின் தலைமை தளபதி தலையை சீவினால் அடுத்த கணத்தில் இமை பொழுதில் தப்பினான் நவாபு அமரனாய் வான் புகழ் எத்தினா தேசிங்கு ராஜா அந்த ராஜா மூத்தவர்களின் ஆலோசனைகளும் வாதங்களையும் எதிர்த்து மானம் உயிரினும் பெரிது என தன் தன் மக்கள் படைவீரர்கள் தன்னை நம்பியே தன்னை நம்பியவர்கள் லுக்கு தன் மனைவி தன் ராஜபோகம் தன்னுடைய மொத்த வாழ்வையும் பரிசாக அளித்தான் அப்பொழுது அவன் வயது 22 .

இவர் வாள் எடுத்து போர் புரிந்த எதிரி தானே வந்து இவருக்கு தகனமேடை கட்டி தகனமேடு சுற்றிலும் சோலை அமைத்தார் இவன் குதிரைக்கும் இவருடைய நண்பனுக்கும் அழகு சமாதி கட்டினார்கள் இறந்த அன்று **நவாப் சதாதுல்லா கான்** செஞ்சியை கைப்பற்றிய **நவாப் சதாத்துல்லாஹ் கான்** அதனுடைய மன்னன் ராதா தேசிங்கும் அவனுடன் உடன்கட்டை ஏறிய அவனுடைய ராணி – **ராணி பாய்** நினைவாக ஒரு நகரத்தை அமைத்து அதில் ராஜா தேசிங்கு ராணி பாய் நினைவிடங்களை ஏற்படுத்த கட்டளையிட்டான் மேலும் நவாப் ராஜாதேசிங் கை ஏரியூட்டி யளிமேடையும் அந்த குதிரை மற்றும் அவனுடைய நண்பனுடைய சமாதிகளுக்கும் இடையில மிகப் பெரிய சோலை அமைக்க 1714 கட்டளையிட்டார் ஆனால் சதாத்துல்லாஹ் கான் 1731 காலமானார்,

நினைவிடங்களோ 1771 இல் தான் கட்டப்பட்டு கட்டிடங்கள் நிறைவு பெற்றன. இதுதான் உண்மை இதுதான் வரலாற்று சான்றுகளின் பொருள்.

**ராஜா தேசிங்கு வீர சொர்கம் வீர சொர்கம் அடைந்தார் ராஜா தேசிங்கு.**

**தொகுப்பு வழங்கியவர் கே.நாகேஸ்வர சிங்**

## ஆசிரியர் குறிப்பு:

இந்த ராஜா தேசிங்கின் வீர சொர்க்கம் எனும் இந்த கட்டுரையில் கூறப்பட்ட அனைத்து விஷயங்களும் ஆராய்ச்சியாளர்களின் ஆவணங்களை ஆதாரமாகக் கொண்டவை. மேலும் இந்தக் கட்டுரையின் நோக்கம் ராஜா தேசிங் போருக்காக எடுத்த முடிவினை பலரும் அணுகுகின்றனர் நோக்குகின்றனர் ஆனால் அவரது பவித்திரமான மனமும். தியாகமும், சுத்த வீரமும் மறைக்கப்பட்டது, இதை ஓர் ஆய்வு கண்ணோட்டத்தோடு கட்டுரையை சுருக்கமாக எழுதப்பட்டுள்ளது. வாசகர் களின் விமர்சனங்களும், சந்தேகங்களும் வரவேற்கிறேன்.


RNI No:TNTAM/2021/82250 www.dinamadai.com

Email : dinamadai2021@gmail.com

தின மடை

DINA MADAI MORNING TAMIL DAILY PAPER

பெரம்பலூரில் நடைபெற்ற தினமடை நாளிதழின் 2ம் ஆண்டு துவக்க விழா மற்றும் ஒப்பெரும் விழாவில் தினமடை நாளிதழின் சார்பாக சாதனையாளருக்கு விருது வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ராஜா தேசிங் ராஜ்புத் மொத்தில் சேனா வின் நிறுவனத் தலைவர் திரு ஸ்ரீதர் சிங் அவர்களுக்கு சிறந்த சமூக சேவகருக்கான விருது வழங்கப்பட்ட போது எடுத்த புகைப்படம்






## வானுயர்ந்த செஞ்சிக்கோட்டையின் வரலாற்று பெருமைகள்

வானுயர்ந்த மலைக்கோட்டை கலைநயமிக்க கற்கோயில்கள் இயற்கை அன்னையின் எழில் மிகு ஓவியமாய், காடும் மலையும் காட்சி தரும் அழகு, வெட்டி வைத்த குளங்கள், கட்டி வைத்த அரண்கள் காட்சி தரும் விருந்து எதிரிகள் எங்களை இடித்து வீழ்த்தினாலும் கலைனயத்துடன் காட்சி தருவோம் என கண்ணீர் சிந்தும் அரண்மனை சுவடுகள்,

சுமார் 830 ஆண்டுகளாய் தமிழனின் பெருமையை தரணிக்கு சொல்லும் எழில் மிகு கோட்டை நம் செஞ்சிக்கோட்டை!! இந்த மலைக்கோட்டையில் அழகு மிகு மதில்

ஆழம் நிறைந்த அகழி இயற்கை எழில் சூழ்ந்த மலைகள் கற்களை கொட்டி கலைநயத்துடன் கட்டி வைத்த கட்டிடங்கள் கடவுளர் சிலையின்றி வெறுமையாய் ஆலயங்கள் வெடிமருந்து இல்லா கிடங்கு தானியம் இல்லா களஞ்சியம்.

பார்க்கவரும்விருந்தினர்களைவரவேற்றுவிழிகளுக்குவிருந்தளித்துக்கொண்டிருக்கிறது எத்தனையோ மன்னர்களின் பாதம் பட்ட பூமியில் அவர்களின் சுவடுகளை தேடி சென்று வரலாறுகளை பேசிக்கொண்டே மகிழ்வோடு தினம் தோறும் மலை உச்சி சிகரம் தொடும் மக்கள் கூட்டம்,

நம் செஞ்சியை பல்லவனும் சோழனும் அரசாண்டபோது இது சிங்கபுர நாடு சுல்தான்களின் ஆட்சியில் இது பாதுஷாபாத் மராட்டியர்கள் காலத்தில் சிந்தி முகலாயர்கள் பாசமாய் இட்ட பெயர் நசரத்கட்டா ஆதி தமிழ்மன்னர்களும் பிரெஞ்சுக்காரர்களும் வெள்ளையனும் நம் மண்ணை செஞ்சி என்றே அழைத்யார்கள் சொந்தங்கள் ஆட்சியில் இரு பாதுஷா பார்த்து மராட்டியர்கள் காலத்தில் சிந்தி முகலாயர்கள் பாசமாய் இட்ட பெயர் நசரத் கட்டா ஆதி தமிழ் மன்னர்களும் புரட்சிகர வெள்ளையனும் நம் மண்ணை செஞ்சி என்றே செல்லமாய் அழைத்தனர்.

சுமார் 830 ஆண்டுகளாய் நம் மண்ணை ஆண்டவர்களின் பெருமையை சொல்லும் கோட்டைகள் தான் ராஜகிரி கிருஷ்ணகிரி சந்திரகிரி சுமார் 830 ஆண்டுகளாய் நம் மண்ணை ஆண்டவர்களின் பெருமையை சொல்லும் கோட்டைகள் தான் ராஜகிரி கிருஷ்ணகிரி சந்திரகிரி ஆனந்த கோன்வம்ச மன்னன் ஆனந்தகோன் கோட்டை கட்டி கிருஷ்ணகோன் கோலோச்சி கோனேரி கோன் படை நடத்தி கோவிந்த கோன் புவியாண்டு புளிய கோன் புகழ் பெற்ற புனித மண் தான் இந்த செஞ்சி இந்த ஐந்து மன்னர்களின் அரசாட்சி கிபி 1200 தொடங்கி கிபி 1330 வரை 130 ஆண்டுகள் அரசாட்சி செய்த

போது தொடர்ந்து இவர்கள் கட்டியதே இந்த வான் முட்டும் வரலாற்றுக் கொட்டைகள் வாழ்ந்த மன்னர்களின் குலதெய்வமாய் செஞ்சி மக்களின் காவல் தெய்வமாய் ராஜகிரி கோட்டையில் அருள் பாலித்து வீற்றிருப்பவள் தான் அன்னை கமலக்கண்ணி குறும்பர் என கோவில் குறும்பர் என கோவில் நரசிங்கராயர் வீர விஜயராயர் வல்லான ராஜன் ஒய்சாளர்கள் என ஆட்சிகள் கைமாறியது.

14 ஆம் நூற்றாண்டு தொடங்கி சுமார் 180 ஆண்டுகள் நாயக்க மன்னர்களின் அரசாட்சி வெங்கட்ரமணர் ஆலயம் கட்டிய முத்தையால் நாயக்கர் நெற்களஞ்சியம் கல்யாண மஹாலும் எழுப்பிய கிருஷ்ணப்ப நாயக்கர் பின் தொடர்ந்து வரதப்பா நாயக்கர் வரை 9 நாயக்க மன்னர்களின் அரசாட்சி தொடர்ந்து நீண்டது பீஜப்பூர் சுல்தான் மிட்சுவா மராட்டிய மன்னன் **ராஜாராம் அவுரங்கசீப்பின் தளபதி ஜுல்பிர்க்கான்**

மத்திய பிரதேஷ் பண்டேல்கண்ட் சொருப்சிங் அவர் மகன் ராஜா தேசிங்கு என செஞ்சி கோட்டையின் ஆட்சி நீட்சி கண்டு வரலாற்றின் சிகரம் தொட்டது செஞ்சி கோட்டையை ஆண்ட மன்னர்கள் எத்தனையோ பேர் இருப்பினும், அத்தனை மன்னர்களின் மொத்த உருவமாய் மக்கள் மனதில் நின்று நிலைத்தவர் நின்று நிலைப்பவர் தேசிங்குராஜன் மட்டுமே காரணம் அடங்க மறுத்த பஞ்ச கல்யாணி குதிரையை அடக்கி தலைநகர் டெல்லியில் வீரன் என பெயர் பெற்று தளபதி பீம்சிங் மகள் ராணி பாயை மணந்து ரஜ புத்திர வீரனாய் கோட்டைக்குத் திரும்பிய மறவன்.

கிபி 1714 இல் தந்தை சொரூப் சிங் மரணத்திற்கு பின் 22 வயதிலேயே யாருக்கும் கப்பம் கட்டி அடிமை அரசனாய் இருக்க மாட்டேன். என சிறுபடையோடு ஆற்காடு நவாப் சாதுத்துல்லா காணின் பெரும்படையை எதிர்த்து போர்க்கள பூமி கடலியில் கிபி 1714 அக்டோபர் 3 வீர மரணம் அடைந்த மாவீரன்.

**நட்புக்கு இலக்கணமாய் தளபதி முகமது கானின் தோழனாய்!**

இளமை முதல் இறப்பு வரை உடனின்று போர்க்களம் கண்டு வீர மரணம் தழுவிய ராஜ புத்திர மாவீரன்...ராஜா தேசிங், மார்பிலே விழுப்புண் ஏற்று வீர மரணத்தை பரிசாய் பெற்ற கணவன் தேசிங்கு உடல் கோட்டையில் எரியூட்டப்பட்ட போது கொழுந்துவிட்டு எறிந்த செந்தணலில் உடன்கட்டை ஏறி கணவன் உடலோடு தன்னையும் மாய்த்துக் கொண்ட வீரப்பெண் ராணி பாயின் பெருமையை பேசாதவர்கள் எவரும் இல்லை.

நூற்றுக்கும் மேற்பட்ட மன்னர்கள் செஞ்சி கோட்டையை ஆண்ட போதும் தேசிங்கு ராஜனை மட்டுமே கிராமப்புற நாட்டுப்பாடல்கள் இன்றும் புகழ் பாடிக்கொண்டிருக்கிறது

36 ஆண்டுகள் தொடர்ந்து ஆட்சியிலிந்த சாதத்துல்லாகான் கிபி 1750 இல் புரட்சி தளபதி புஸ்ஸியிடம் பறிபோனது ஆட்சி பிரெஞ்சுக்காரர்கள் செஞ்சி கோட்டையை வெள்ளையர்களின் தளபதி ஜென்ரல் கூட் கேப்டன் ஸ்டீபன்ஸ் இடம் கிபி 1761 இல் நடந்த போரில் கோட்டையை கைமாற்றினர்.

போர்க்கள பூமி கடலி என்கிற பத்திய பேட்டையில் ராஜா தேசிங்கை கிபி 1714 அக்டோபர் 3 வீர மரணம் அடையச் செய்த சாதத்துல்லா கான் 1750 செப்டம்பர் 11ல் வெள்ளிமேடு பேட்டையில் பிரெஞ்சுப் படைகளை எதிர்கொள்ள சென்ற போது ஹிம்மத் பகதூர் கான் மற்றும் கிருபாச்சாரின் துப்பாக்கிகளுக்கு இரையானான்.

இப்படி முடிகிறது செஞ்சியின் வரலாறு என்பது தொன்மையும் பழமையும் அடிப்படை ஆதாரமாகக் கொண்டது!!

இது வந்து சென்றவர்களின் வாழ்க்கை மட்டுமல்ல அவர்கள் நமக்கு தந்து சென்ற பாடம் வரலாறு, உலகத்தில் பிறப்பதில்லை அது உள்ளூரிலிருந்து தோன்றுவது நேற்று இறந்தவன் இன்று இருப்பவன் நாளை பிறப்பவன் மூவரும் போட்டுக் கொள்ளும் ஒப்பந்தம் தானே வரலாறு.

**நாம் வரலாறு படிப்போம்!**
**வரலாறு படைப்போம்!!**

நன்றி!

**நா.முனுசாமி**
தலைமை ஆசிரியர் ஒய்வு
அன்னமங்கலம், செஞ்சி


**GPRS THIRU MURUGA INDUSTRIES**

2/102, Sanasandiram Village, Chenathur,
Krishnagiri Dt, Hosur - 635109
Phone No: 9677816003,
Email gprsindustries@gmail.com
GSTIN:33AAFG5468P1ZD,
Tamilnadu 33

# விழுப்புரம் ஆட்சியருடன் சந்திப்பு

ராஜா தேசிங் ராஜ்புத் பொந்தில் சேவா சேனாவின் நிர்வாகிகள் ஒன்று கூடி விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் **திரு மோகன்,** I.A.S. அவர்களை நேரில் சந்தித்து செஞ்சியில் நம் சமூகத்தை சேர்ந்த வீரமிக்க வரலாற்று புகழ் பெற்ற மகாராஜா ராஜா தேசிங் அவர்களின் வரலாறு நமது வருங்கால சந்ததியினர் மறவாமல்ஃமறக்காமல் மறையாமல் காத்திட செஞ்சியில் முக்கிய பகுதியான பேருந்து நிலையத்திலோ நான்கு முனை சந்திப்பு சாலை நடுவிலோ அல்லது கோட்டை வாயிலிலோ சிலை அமைக்க தமிழக அரசு ஏற்பாடு செய்து தரவேண்டும் அல்லது எங்களது சேனா சார்பில் சிலை அமைக்க அனுமதி வழங்க கோரி மனு அளித்தோம்.

இதன் தொடர்ச்சியாக அன்றைய தினமே அரசாங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் காவல்துறை அதிகாரிகள் உட்பட பலர் நமது ராஜா தேசிங் ராஜ்புத் பொந்தில் சேவா சேனாவின் நிறுவனரான **திரு.G.ஶ்ரீதர்சிங்** அவர்களை தொடர்பு கொண்டு தேசிங்கு ராஜாவின் வரலாற்றை கேட்டு அறிந்து ஆவண செய்வதாக வாக்கு அளித்தனர்.

## ராஜா தேசிங்குக்கு சிலை அமைக்க கோரிக்கை



■ ராஜா தேசிங்கு, ராணிபாய் வம்சாவழியினர், செஞ்சியில் மாவீரன் ராஜா தேசிங்குக்கு சிலை அமைக்கக்கோரி விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் மோகனிடம் மனு கொடுக்க கலெக்டர் அலுவலகத்துக்கு வந்தனர்.

# ராணிப்பேட்டை ஆட்சியருடன் சந்திப்பு




நமது சேனாவின் நிர்வாகிகள் ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் **திரு.D.பாஸ்கர பாண்டியன், I.A.S.** அவர்களை நேரில் சந்தித்து நமது வரலாற்றுச் சின்னமான மகாராணி ராணி பாய் அவர்களின் நினைவிடத்தை (பாலாற்றங்கரையில் அமைந்துள்ள) பராமரிக்கவும் அங்கு தேசிங்கு ராஜா மகாராணி ராணி பாய் சிலைகள் அமைத்து தரவேண்டும் அல்லது நாங்கள் அமைத்துக் கொண்டு பராமரித்துக் கொள்ளவும் அரசிடம் அனுமதி பெற்று தருமாறு மனு அளித்துள்ளோம்.

பெறுநர்,

மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், ராணிப்பேட்டை மாவட்டம்

பொருள் : மாவீரன் ராஜா தேசிங் மற்றும் ராணிபாய் அவர்களின் நினைவுச் சின்னங்கள் பராமரித்தல் தொடர்பாக.

மதிப்பிறகுரிய ஐயா அவர்களுக்கும் வணக்கம்,

வராலாற்று சிறப்பு மிக்க மாவீரன் ராஜா தேசிங் மற்றும் ராணிப்பேட்டை பெயர் பெற காரணமாய் விளங்கிய மகாராணி ராணி பாய் அவர்களின் நினைவு சின்னங்களை சீரமைத்து தரவும், பராமரிக்க வேண்டியும் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே இம்மாவட்ட ஆட்சித்தலைவருக்கு மனு கொடுத்திருந்தோம். அது குறித்து நல்லதொரு முடிவை அறிவிப்பதாக கூறியிருந்தனர். ஆனால் தற்போது அந்த நினைவுத் தூண்கள் அமைந்துள்ள பகுதி சமூக விரோதிகளின் கூடாரமாக மாறி விட்டது.

ஆகவே ராஜா தேசிங் அவர்களின் வம்சாவழியினரான நாங்கள் இப்பகுதியில் வாழ்ந்து வரும் எங்கள் சமுதாய மக்களோடு இணைந்து எங்களது சொந்த செலவில் இவ்விடத்தை பராமரிக்கவும், தூய்மையாக வைத்துக் கொள்ளவும் தங்களின் மேலான அனுமதியும் அதற்கான ஆவண செய்து தருமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**இவன் G. ஸ்ரீதர் சிங்**

ராஜாதேசிங் ராஜ்புத் பொந்தில் சேனா

## முதல்வரிடம் மனுஅளித்தோம்

நமது மாண்புமிகு **தமிழக முதல்வர்** அவர்கள் திருவண்ணாமலை கூட்டத்தில் கலந்து கொள்ள செல்லும் வழியில் செஞ்சியில் நமது சேனாவின் நிர்வாகிகள் **திரு.தேசிங்கு** மற்றும் **திரு.ஜெய்சிங்** அவர்கள் நமது முதல்வரை சந்தித்து ராஜா தேசிங் சிலை மற்றும் மணிமண்டபம் செஞ்சியில் அமைத்து தரவும் மற்றும் நம் சமூகத்தை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கவும் நமது அமைப்பின் நிறுவனர் **திரு.ஸ்ரீதர்சிங்** அவர்களால் எழுதப்பட்ட கோரிக்கை மனு அளித்துள்ளனர்.

15/7/2022ஆம் தேதி அன்று மனு கிடைக்கப்பெற்றது எனும் தகவல் நம் சேனா நிறுவனர் **திரு.ஸ்ரீதர்சிங்** அவர்களுக்கு கைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டது.


Kaarthick (Velu) Mob: 94420 03949
:90472 27003

வேல் அரிசி மண்டி


Vel Rice Traders

Wholesae & Retail Dealers of All Brand Rice

Whosale & Retail Dealers of
All Brand Rice

#704-1B, 1B, Near, T.K.Hotel, Opp. TTD Kalyana Mantapam,
KCC Nagar, Bagalur Road, Hosur - 635 109.

# நிர்வாகிகள் அறிமுகம் மற்றும் ஆலோசனைக்கூட்டம்



நமது சேனாவின் நிர்வாகிகள் அறிமுக மற்றும் விருது வழங்கும் கூட்டம் ராணிப்பேட்டை **VC** மேட்டூரில் அமைந்துள்ள **ஸ்ரீ கமல விநாயகர் திருமண மண்டபத்தில்** நடைபெற்றது. இக்கூட்டத்தில் முக்கிய விருந்தினராக நமது சமூகத்தை சேர்ந்தவரும் தாம்பரம் ஐந்தாவது மண்டல குழு தலைவர் ஆன திரு.**S. இந்தர் சிங்** அவர்கள் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பித்தார்.



கூட்டத்தின் முதல் நிகழ்ச்சியாக மகாராணி ராணி பாய் நினைவிடம் சென்று மலர் தூவி மரியாதை செலுத்தி, அங்கிருந்து சுமார் 1.5 கிலோமீட்டர் வரை நமது ராஜா தேசிங் மற்றும் ராணிபாய் அவர்களை போற்றும் வகையில் சுமார் 400க்கும் மேற்பட்ட நம் சமுதாயத்தவர் கலந்து கொண்டு கோஷங்கள் இட்டு நடைப்பயணம் மேற்கொண்டது ராணிப்பேட்டை மக்களை வியப்பில் ஆற்றக்கூடிய அளவில் இருந்தது.

மேலும் நம் சேவா சேனா கூட்டத்தில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் **திரு.R.காந்தி** அவர்கள் கலந்து கொண்டு பாலாற்றங்கரையில் அமைந்துள்ள மகாராணி ராணி பாய் அவர்களின் நினைவிடத்தை புணரமைத்து சுற்றுலா பூங்காவாக அமைத்து தருவதாக வாக்களித்தது கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் பெரும் நெகிழ்ச்சியாக அமைந்தது.

அமைச்சர் சொன்னபடியே 23.08.2022 அன்று வட்டாட்சியர் மற்றும் அதிகாரிகளுடன் மகாராணி ராணி பாய் நினைவிடம் சென்று ஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுத்தது மேலும் சேனாவின் வீரர்களுக்கு புத்துணர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.



ராணிப்பேட்டை பாலாற்றங்கரையில் உள்ள தேசிங்கு ராஜா, ராணிபாய் நினைவிடத்தை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி நேற்று நேரில் ஆய்வு செய்தார். அருகில், மாவட்ட ஆட்சியர் பாஸ்கர பாண்டியன், நகராட்சி மன்ற தலைவர் சுஜாதா வினோத்குமார் உள்ளிட்டோர்.

### தேசிங்கு ராஜா, ராணிபாய் நினைவிடத்தை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்

● அமைச்சர் ஆர்.காந்தி தகவல்

ராணிப்பேட்டை, ராணிப்பேட்டை பாலாற்றங் கரையில் உள்ள தேசிங்கு ராஜா, ராணிபாய் நினைவிடத்தை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் ஆர். காந்தி உத்தரவிட்டுள்ளார்.

ராணிப்பேட்டை நகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள திருமண மண்டபத்தை நவீன வசதிகளுடன் கூடியதாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர் பாக கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி நேற்று நேரில் ஆய்வுசெய்தார். அப்போது மாவட்ட ஆட்சியர் பாஸ்கர பாண்டியன், நகராட்சி மன்றத் தலைவர் சுஜாதா வினோத்குமார், நகராட்சி ஆணையாளர் ஏகராஜ், துணைத்தலைவர் ரமேஷ் கர்ணா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

இதனை தொடர்ந்து, பாலாற்றங் கரையில் உள்ள தேசிங்கு ராஜா மற்றும் ராணிபாய் நினைவிடத்தை அமைச்சர் பார்வையிட்டதுடன், அந்த இடத்தை சீரமைத்து போதிய வழிகாட்டு பலகைகளை வைக்கவும், ராஜா மற்றும் ராணி குறித்த வரலாற்றை அனைவரும் தெரிந்துகொள்ளும் வகையில் பதாகைகள் வைக்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் உத்தரவிட்டார். மேலும், நினைவிடம் அமைந்துள்ள இடத்தை மாவட்ட நிர்வாகம் சீரமைக்கவும் அவர் உத்தரவிட்டார்.

நமது சேவா சேனா கூட்டத்தில் சான்றோர் மற்றும் மூத்தோர்க்கு விருதுகள் வழங்கி கௌரவப்படுத்தியது பெருமைக்குரியதாக எண்ணி மகிழ்கிறது சேவா சேனா அமைப்பு.


மேலும் நமது சமூகத்தை சேர்ந்த ஏழை நோயாளியின் மருத்துவ செலவிற்கு ரூபாய் 10,000 வழங்கப்பட்டது, ஏழை மக்களுக்கு நலத்திட்ட உதவிகளும் மின்விசிறிகளும் வழங்கப்பட்டன. கலந்து கொண்ட அனைத்து நிர்வாகிகளுக்கும் நினைவு பரிசாக கேடயம் வழங்கி கௌரவித்து பெருமை சேர்த்தது சேவா சேனா அமைப்பு. மேலும் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் சுவையான விருந்தளித்து மகிழ்ந்தது நம் ராஜா தேசிங் ராஜ்புத் பொந்தில் சேனா.

**ஜெய் ராஜ்புத்தானா**

**ஜெய் ஹோ ராஜாதேசிங் ராஜ்புத் பொந்தில் சேனா.**



## செஞ்சி கோட்டை
## ராஜ்புத் ராஜாதேசிங் பொந்தில் சேனா





30.04.2023. ஞாயிற்றுகிழமை செஞ்சியில் நடைபெறும், நமது சங்கத்தின் இப்பெருவிழாவிற்கு வருகை தந்து சிறப்பிக்க உள்ள ராஜ்புத் பொந்தில் உறவினர்கள் அனைவரையும் வருக வருக என வரவேற்கிறோம்.

**G.ரமேஷ்சிங்**

**R.ஷர்மிளா டாகூர் பாய்,**

**ஸ்ரீராகவேந்திரா மளிகை, 5C/19, சிங்குதெரு, வலங்கைமான்-P.G. திருவாரூர் D.T.**

# மணலூர்பேட்டை கிளை திறப்பு



இன்று 14.12.2022 புதன் கிழமை ராஜாதேசிங் ராஜ்புத் பொந்தில் சேனாவின் புதிய கிளை மணலூர் பேட்டையில் சேனாவின் முக்கிய நிர்வாகிகள் முன்னிலையில் சிறப்பாக துவங்கப்பட்டது. இந்நிகழ்வில் மாநில நிறுவனத் திரு. **ஸ்ரீதர் சிங்** சிறப்பு அழைப்பாளராக கலந்துக் கொண்டு கிளையை துவங்கி வைத்தார்.



விழாவில் மாநில இணை ஒருங்கிணைப்பாளர் திருமதி. **ஷோபாராணிபாலாஜிசிங்,** மாநில இணை ஒருங்கிணைப்பாளர் திரு.**நாராயணசிங்,** மாநில துணை ஒருங்கிணைப்பாளர்கள், திருமதி.**கன்யாபாய்நாராயணசிங்,** திரு. **ராஜேஷ் சிங்** – மற்றும் மாநில பொருளாளர் திரு. **பாலாஜி சிங்,** அமைப்பின் காப்பாளர்கள் திரு.**அன்பரசுசிங்,** திரு. **குருசிங்** தலைமை கிளைய செயலாளர் திரு.**ரவிசந்திரன் சிங்** செஞ்சி கிளை அமைப்பாளர் திரு. **ஜெய்சிங்** உள்ளிட்ட பல மாநில மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர் – முன்னதாக புதிய கிளையான மணலூர் பேட்டை கிளைக்கு.

தலைவர் : திரு.**N.மணிகண்டன் சிங்,** (அமைப்பாளர்), செயலாளர்: திரு.**T.நிர்மல்சிங்,** பொருளாளர்: திரு. **M.கொளஞ்சிராம்சிங்,** மகளிரணி அமைப்பாளர் : திருமதி. **M.குப்புபாய்,** இளைஞர் அணி அமைப்பாளர்: திரு. **H.ஜெகன்நாத் சிங்,** திரு.M. **சந்தோஷ் சிங்,** உள்ளிட்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

# தமிழ்நாட்டின் நம்பர் 1 கிளை துத்திப்பட்டு

வாழ்க ! ராஜதேசிங்கு புகழ்!!

**ராஜா தேசிங் ராஜ்புத் பொந்தில் சேனா திருப்பத்தூர் மாவட்டம்.**

துத்திபட்டு சினை. ஆம்பூர் தாலுக்கா, தமிழ்நாடு

எங்களுடைய துத்திப்பட்டு கிளை ராஜ்புத் பொந்தில் சங்கமாக துவங்கி 2017–ம் ஆண்டு முதல் செயல்பட்டு வந்தோம். இப்பொழுது நிறுவனரும் மாநிலத்தலைவருமான திரு.G.ஸ்ரீதர்சிங் அவர்களின் தலைமையில் இணைந்து ராஜா தேசிங் ராஜ்பத் பொந்தில் சேனா என்ற அமைப்பாக தொடர்ந்து செயல்படுகிறோம். நாங்கள் எங்கள் துத்திபட்டு கிளையில் இருக்கும் நூற்று நாற்பதுக்கும் மேற்பட்ட குடும்பங்களை ஒன்றினைத்து அரவணைத்து மாதச்சந்தாவும் வசூல் செய்து சீட்டுக்கள் நடத்தியும் சேரும் பணத்தில் சங்க உறுப்பினர்களே தங்கள் தேவைக்கு பெற்றுக்கொண்டு சங்கத்திற்கு உதவியாக அர்கள் சேர்த்துக் கொடுக்கும் தொகையை சேமித்து வைத்து எல்லோரும் ஒற்றுமையா செயல்பட்டு நாங்கள் செய்த சிறு உதவிகளை அனைவரிடமும் பகிர்ந்து கொள்கிறோம்.

2017ம் ஆண்டுமுதல் 2023 வரை ஏப்ரல் மாதம் வரை 29 குடும்பங்களில் நடைபெற்ற திருமண நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு **ரூ.29,029/–**அன்பளிப்பு வழங்கி இருக்கிறோம். 38 குடும்பங்களில் நடந்த இறப்புகளுக்கு **ரூ.84,360/–** வழங்கி ஆறுதல் தெரிவித்து இருக்கிறோம். **23.03.2020**ல் கொரானா நிவாரணமாக அனைத்து குடும்பங்களுக்கும் **55,000/–** செலவில் மளிகை பொருட்கள் வழங்கி இருக்கிறோம். **27.02.2022 மு.செல்விபாய் மகள்** ஆப்ரேசனுக்கு **ரூ.5,000/–** வழங்கினோம்.

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி **26** ஆகஸ்ட் **15**ம் தேதிகளில் குடியரசு தினம், சுதத்திர தினத்தன்று நமது சங்கத்தின் சார்பாக தேசியக்கொடியை ஏற்றி வைத்து அனைவருக்கும். இனிப்பு வழங்கி, மாணவச் செல்வங்களுக்கு பேனா மற்றும் நோட்டு புத்தங்கள் வழங்கி ஊக்கப்படுத்துகிறோம்.

**21.08.2022** சு.வேலன்சின் மனையி கொடி அரசிக்கு ஆப்ரேசனுக்கு ரூ.**10,000/–** பெற்றுத் தந்தோம். **25.12.2022** கோயமுத்தூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற சங்க உறுப்பினருக்கு ரூ.**3000/–** அனுப்பி உதவி செய்தோம். **2017** ஆண்டு முதல் **2023** ஆண்டு ரூ.13,000, நன்கொடை வழங்கி இருக்கிறோம். வரை வினாயகர் சிலை வைப்பதில் சங்கம் துவங்கிய நாள் முதல் நடைபெற்ற அனைத்து மீட்டிங்கிலும் கலந்துக்கொள்ளவேன்.பஸ், கார் மற்றும் அனைத்து செலவுகளுக்கும் ரூ.1,20,000/–வரை செலவு செய்து இருக்கிறோம்.


நாங்கள் குடியிருக்கும் தெருக்களில் இருக்கும் கோயில்களுக்கு மாதம் 600/– வீதம் ரூ.36,000/– பூஜை செலவுகளுக்கு கொடுத்து வருகிறோம்.


ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் கடைசி வாரத்தில் அனைத்து குடும்பங்களுக்கும் தினசரி காலண்டர், இனிப்பு, காரம், பரிசுகள் என்ற வகையில் ரூ.24,000/– செலவு செய்கிறோம். இப்பொழுது எங்கள் ஜாதி சங்கத்திற்காக சொந்தமான கட்டிடம் கட்டுவதற்காக துத்திப்பட்டு கன்றாம்பள்ளி சூர்யா

நகர் என்ற பகுதியில் **ரூ.10,00,000/–** பத்து இலட்சம் ரூபாய்க்கு **6000** சதுரடியில் நிலம் வாங்கி இருக்கிறோம். அந்த இடத்தில் கட்டிடம் கட்ட துவங்கும் பொழுது நமது தமிழ்நாட்டில் இருக்கும் அனைத்து கிளை சங்கங்களும் மற்றும் தலைமைச் சங்கமும் உணவு உதவியும் பொருளுதவியம் செய்தும் பணி சிறக்க வாழ்த்தும்படி கேட்டுக்கொள்கிறோம்.





இங்ஙனம்,
துத்திப்பட்டு கிளை,
ராஜாதேசிங்கு ராஜ்புத் பொந்தில் சேனா நிர்வாகிகள்.









## நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம்




**18.09.2022** ஞாயிறு காலை **11** மணியளவில் நமது ராஜா தேசிங் ராஜ்புத் பொந்தில் சேனாவின் சார்பாக வரும் **3.10.2022** மற்றும் **09.10.2022** அன்றைய தினங்களில் முறையே ராஜா தேசிங் அவர்களின் நினைவு நாள் மற்றும் ராணி பாய் அவர்களின் நினைவு நாள் நிகழ்ச்சிகள் குறித்த ஆலோசனை கூட்டம் ஒசூரில் பஸ்நிலையம் அருகில் பாகலூர் சாலையில் உள்ள ஓட்டல் தனுஞ்செயாவில் நடைபெற்றது. நிர்வாகிகள் அனைவரும் கலந்துக்கொண்டு தங்களின் மேலான ஆலோசனைகளை வழங்கினர்.

நன்றி **G. ஸ்ரீதர்சிங்**

# ஆங்கில நாட்காட்டி வெளியீடு






நம் சமுதாய மக்கள் நலனில் என்றும் அக்கறை கொண்ட ராஜா தேசிங் ராஜ்புத் பொந்தில் சேனா வின் மாநில இணை ஒருங்கிணைப்பாளர் திரு நாராயன்சிங் மற்றும் துணை ஒருங்கிணைப்பாளர் திருமதி சுகன்யாபாய் நாராயன்சிங் அவர்களும் ஆங்கில புத்தாண்டு காலண்டர்களை தமது சொந்த செலவில் வழங்கி மகிழ்ந்தனர். அவர்களுக்கு சேனாவின் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

## பொன்னங்குப்பம் கிளை திறப்பு மற்றும் மருத்துவ நலஉதவி

**01.01. 2023** புத்தாண்டு தினத்தன்று விழுப்புரம் மாவட்டம் பொன்னங்குப்பம் கிராமத்தில்நம்முடைய ராஜா தேசிங் ராஜ்புத் பொந்தில் சேனாவின் புதிய கிளை கோலாகலமாக துவங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் பல்வேறு மாநில மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் நிகழ்ச்சியில் பொன்னங்குப்பம் **திரு.B.தேசிங்** மற்றும் **உஷா பாய்** அவர்களின் அன்பு மகன் **சிரஞ்சீவி, D.குருநாத் சிங்** அவர்களின் மருத்துவ நல உதவிக்காக நம்முடைய சமுதாய மக்களிடம் வசூலித்த தொகை **ரூபாய் 39500.00 (முப்பத்தொன்பதாயிரத்து ஐநூறு)** ரூபாய்க்கான காசோலையை நமது ராஜ்புத் சேனாவின் நிறுவனர் **திரு.ஸ்ரீதர்சிங்** மாநில பொருளாளர் **திரு.பாலாஜி சிங்** மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர் **திரு.நாராயணன் சிங்** தலைமை நிலைய செயலாளர் **திரு.ரவிச்சந்திர சிங்** மாநில துணை ஒருங்கிணைப்பாளர் **திருமதி.சுகன்யாபாய் நாராயண சிங்** மாநில துணை ஒருங்கிணைப்பாளர் **திரு.பண்ருட்டி ராஜேஷ் சிங்** அவர்கள் கடலூர் மாவட்ட தலைவர் **திரு. ரவிச்சந்திரன் சிங்** மாநில இளைஞரணி **தலைவர்.திரு.ஜெகதீஸ்வரர் சிங்** நாமக்கல் ராசிபுரம் கிளை **திரு.பிரகதீஸ்வர் சிங், திருமதி. மணிமேகலாபாய்** மற்றும் சங்கத்தின் காப்பாளர்கள் **திரு. தேசிங்** மற்றும் **குரு சிங்** செஞ்சி கிளை தலைவர் **திரு.ஜெய் சிங்** மணலூர்பேட்டை கிளை **நிர்மல் சிங்** மாநில சட்ட ஆலோசகர் **திரு. கிஷோர் சிங் ஓசூர்** கிளை நிர்வாகி **திரு. ராம்கிருஷ்ணன் சிங் பண்ருட்டி** மூத்த நிர்வாகி திரு. **சங்கர் சிங்** கானை **திரு.குபேர்சிங்மகளிரணி, திருமதி.நிர்மலா மதன்சிங்** உள்ளிட்ட பல நிர்வாகிகளின் முன்னிலையில் நிதி வழங்கப்பட்டது .





இந்நிகழ்ச்சியில் பொன்னங்குப்பம் கிளை நிர்வாகிகள் மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர் ராஜா தேசிங் ராஜ்புத் பொந்தில் சேனா என்ற நமது அமைப்பின் மூலம் ஆண்டின் முதல் நாளே சேவையை தொடர்ந்து உள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

அதே நேரத்தில் நிதியை வழங்கிய நல் உள்ளங்களுக்கும் விழாவில் நன்றி தெரிவிக்கப்பட்டது. அங்கிருந்து நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு செஞ்சி நோக்கி மாநில நிர்வாகிகள் திரு ஸ்ரீதர் சிங் அவர்கள் தலைமையில் செஞ்சி சட்டமன்ற உறுப்பினரும் அமைச்சருமான திரு செஞ்சி மஸ்தான் அவர்களை நேரில் சந்தித்து புத்தாண்டு வாழ்த்துக்களையும் ராஜா தேசிங் அவர்களின் சிலை அமைப்பது குறித்து திரு மஸ்தான் அவர்களிடம் கலந்துரையாடி மகிழ்ச்சியோடு அமைச்சரோடு புகைப்படங்களை எடுத்துக்கொண்டு அவர் அவர்கள் தங்களின் ஊர்களுக்கு திரும்பினோம் என்பதை நம்முடைய உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியப்படுத்திக் கொள்கின்றோம். என்றும் சமுதாய வளர்ச்சிக்காகவும் ஏழை எளிய மக்களின் நலனுக்காகவும் தொடர்ந்து சேனா தனது சேவைகளை தொடரும்.

நன்றி

**ராஜாதேசிங் ராஜ்புத் பொந்தில் சேனா வளரவும், “பொந்தில் சேனா” நூல் மலரவும் துணை நின்ற அத்துணை நிர்வாகிகளுக்கும் எங்களது மனம் நிறைந்த வாழத்துகளோடு நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்**



# செவிலியர்



செவிலியர்களின் அன்னை பள்ளிப் பாடங்களின் வாயிலாக கை விளக்கேந்திய காரிகை என்ற பெயரில் நமக்கு அறிமுகமானவரும் செவிலியர்களுக்கு இலட்சிய உருவமாக இருப்பவருமான ப்ளாரன்ஸ் நைட்டிங் கேலின் பிறந்த நாள் மே மாதம் 12 ஆகும். ஒரு பெருந் தொற்று காலத்தில் கைகள் கழுவுவது உள்ளிட்ட அடிப்படையான பழக்கவழக்கங்கள் குறித்துப் பேசும் இந்நாட்களில் ப்ளாரன்ஸ் நைட்டிங்கேல் அவர்களை நினைவு கூர்வது இன்ன மும் பொருத்தமானது. பொதுச் சுகாதாரத்தையும், சுத்தத் தையும் மேம்படுத்துவதன் மூலம் தொற்று நோய்ப் பரவலைக் குறைக்க முடியும் என்பதை தனது செயல்பாடுகளின் வழியாக நிரூபித்துக் காட்டிய முதன்மையான நவீன செவிலியர் அவர் தான். செவிலியப் பணிக்கு வருவதற்கு முன் கணிதத்தில் ஈடுபாடு மிக்க அவர் தொற்று நோய்கள் பரவுவது குணப்படுத் துவது தொடர்பில் புள்ளியியலையும் விளக்கப்படங்களையும் பயன்படுத்திய முன்னோடி ஆவார். கிரீமியன் போரில் அவர் களின் தலைமையில் துருக்கிக்குச் சென்று 38 செவிலியர்கள் ராணுவ மருத்துவமனைகளில் இருந்த நிலையைப் பார்த்து அவர் மனம் திகிலடைந்து, காயமடைந்த வீரர்கள் ஒருவரின் மூச்சு இன்னொருவருக்குப் படும்படி படுத்திருந்த அறைகள், அழுக்கான கழிவு நீர், தவளை, எலிகள் ஓடும் தாழ்வாரம் என ராணுவ மருத்துவமனை நரகம் போல இருந்தது. போர்க் களத்தில் அடைந்த காயங்களால் விளைந்த மரணங்களை விடவும் மருத்துவமனைக்கு வந்த பின்னர் ஏற்பட்ட நோய் களால் ஏற்பட்ட மரணங்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது.

நைட்டிங்கேல் உருவாக்கிய போலார் விளக்கப்படத்தில் நீல வண்ணமிட்ட பகுதிகள் முன்கூட்டியே தடுக்கக்கூடிய வியாதிகளைக் காட்டக்கூடியதாகவும், சிவப்பு வண்ணம், போரில் பட்ட காயங்களால் ஏற்பட்ட மரணங்களையும், கருப்பு வண்ணம் பிற காரணங்களால் ஏற்பட்ட மரணங் களையும் காட்டுவதாகவும் இருந்தது.

அவர் சுகாதாரத்தை மேம்படுத்தியதன் விளைவாக இறப்பு விகிதம் 40 % லிருந்து 2.2% ஆகக் குறைந்தது. 1857 ல் நைட்டிங்கேலை ப்ரூசெல்லோசிஸ் நோய் தாக் கியது. இந் நோய் கிரீமியன் போரில் காயமடைந்த வீரர் களுக்கு சேவையாற்றிய கால கட்டத்தில் வந்திருக்கலாம் என கருதப்படுகிறது. அவர் படுக்கையில் இருந்தும்இ நூற்றுக் கணக்கான நூல்கள்இ அறிக்கைகள்இ தனது வாழ்நாள் முழுவதும் செவிலியர்களுக்காகவே எழுதி வெளியிட்டார். இங்கிலாந்தில் உள்ள கல்லூரிகள் அவரது முயற்சியின் வாயிலாகவே தொடங்கப்பட்டன. மருத்துவமனைகளில் பெட்பேன் என்ற கழிகலன்கள் வழங்க தொடங்கியிருந்தனர். காற்றோட்டமான இடமும், சுத்தமான போர்வைகள்இ உணவுக்

கிண்ணங்களும் நோயாளிகளுக்கு அவசியம் என்ற எண்ணம் உருவாகியிருந்தது.

இப்போது கரோனா பரவலைக் கணக்கிடக்கூட அவர் உருவாக்கிய கணக்கு மாதிரிகள் உதவுகின்றன. நோயா ளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பது, வீழ்ச்சி அடைவது எதிர்கால நிலைமை பற்றிக் கணிப்பது என எல்லாவற் றிற்கும் இந்தக் கணக்கீடு உதவுகிறது.

கை விளக்கேந்திய காரிகையின் பிறந்தநாளை கொண் டாடும் வேளையில் ஒரு பெருந்தொற்றுக் காலத்தில் அவர் தனது கணிதத்தின் மூலம் பரப்பிய ஒளிக்காக அவருக்கு நன்றி சொல்வோம்.

**''அன்பு செலுத்துங்கள். காலம் குறைவாக இருக்கிறது''**

பிளாரன்ஸ் நைட்டிங்கேல் செவிலியரான இவர் ''கைவிளக்கு எந்திய தேவதை'' The Lady with the lamp என்று அழைக்கப்படுகின்றார். செவிலியர் சமூக அமைப்பின் சீர்திருத்தவாதி மற்றும் நவீன செவி லியர்கள் அமைப்பின் நிறுவனராகவும் திகழ்ந்தார். கிரிமியன் போரின்போது ஒரு செவிலியராக அவரது பணியை தொடங்கினார். அவர் செயின்ட் தாமஸ் மருத்துவமனை மற்றும் செவிலியர்களுக் கான நைட்டிங்கேல் பயிற்சிப் பள்ளியை 1860 ஆண்டு நிறுவி ஆயிரக்கணக்கானோரை செவிலியராக்கினார். செழிப்பு மிக்க குடும் பத்தில் பிறந்த இவர் ஜெர்மன்இ பிரஞ்சுஇ இத்தாலி மொழிகளில் புலமை பெற்றவர்.''அன்பு செலுத்துங்கள் காலம் குறைவாக இருக்கிறது'' என்ற வேத வாசகத்தால் ஈர்க்கப்பட்டார். லண்டனில் மிடில்செக்ஸ் மருத்துவமனையில் கண்காணிப்பாளராக பதவி உயர்வு பெற்றார். அவர் கால கட்டத்தில் பெண்கள் செவிலியர் பணி செய்ய எதிர்ப்பு கிளம்பியது. இதனை எதிர்த்துப் போராடிய வெற்றி கண்ட நைட்டிங் கேல் 1854 ஆம் ஆண்டில் 34 செவிலியர்களுடன் கிரிமியா என்ற இடத்திற்கு சென்று படுகாயமடைந்த போர் வீரர்களுக்கு விளக்குகள் ஏந்திச் சென்று சிகிச்சை அளித்ததினால் அவர்களின் கண்களுக்கு தேவதையாகத் தோன்றினார்.

1883 ஆம் ஆண்டு ''செஞ்சிலுவைச் சங்க'' விருதும் அவருடைய 84 ஆம் வயதில் இங்கிலாந்து நாட்டின் உயரிய விருதான Grder Hf Merit விருதும் வழங்கப்பட்டது. இவ்வாறு அவர் வாழ்க்கை முழுவதையும் செவிலியர் பணியில் தம்மை முழுமையாக தன்னை அர்ப்பணித்து அரியபலசேவைகள் செய்து 1910 ஆம் ஆண்டுஇயற்கை எய்தினார். அவருடைய மறைவிற்குப் பிறகு ஒவ்வொரு ஆண்டும் மே 12 ஆம் தேதி லண்டனில் உள்ள வெஸ்ட் மினிஸ்டர்அபே மாளிகையில் உள்ள விளக்குகளில் ஒளியேற்றி செவிலியர்கள் ஒவ்வொருவராக கைமாற்றப் பட்டு மாளிகையின் உயர்ந்த பீடத்தில் வைக்கப்படுகிறது. பிளாரன்ஸ் நைட்டிங்கேல் ஓர் எழுத்தாளராகவும், முதன் முதலில் நர்ஸிங் பயிற்சிப் பள்ளியை இவரே ஆரம்பித்தவராகவும் திகழ்ந்தவரை.

உலகெங்கிலும் சேவை புரியும் செவிலியர்களின் மகத்தான பணி களை நாம் அனைவரும் பாராட்டுவோம். அவர்களின் பணி என் றென்றும் போற்றத்தக்கது. மதிக்கத்தக்கது, வணங்கத்தக்கது.

# மரபுநடைவிழா

அன்பான **பொந்தில் ரஜபுத்திர சொந்தங்கள்** அனைவருக்கும் வணக்கம்!
நேற்று 07.01.2023 அன்று, நம் சமுதாய அரசரான ராஜா தேசிங் ஆட்சி புரிந்த செஞ்சி கோட்டையில், தமிழக அரசால் நடைபெற்ற மரபு நடை விழாவிற்கு ராஜா தேசிங் ராஜ்புத் பொந்தில் சேனாவிற்கு அழைப்பு விடுத்து, முக்கிய இடமளித்து கௌரவிக்கப்பட்டது.


இந்நிகழ்ச்சியில் முக்கிய விருந்தினராக **தமிழக சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் இந்திய நலத்துறை அமைச்சர் செஞ்சி திரு.மஸ்தான்** அவரகள் கலந்து கொண்டு விழாவிற்கு மட்டுமல்லாமல், நமது அமைப்பிற்கும் முக்கியத்துவம் அளித்தது, மிக்க மகிழ்ச்சியாக இருந்தது.
**இந்நிகழ்ச்சியில் பங்குபெற்ற ராஜா தேசிங் ராஜ்புத் பொந்தில் சேனாவின் நிர்வாகிகள்**
**திரு.ஸ்ரீதர் சிங்**, ஒசூர், **திரு.நாகேஸ்வரசிங்**,சென்னை, **திரு.பாலாஜிசிங்**,சென்னை, **திருமதி.ஷோபாராணி**, சென்னை, **திரு.ராஜேஷ் சிங்,** பண்ருட்டி, **திரு.சங்கர் சிங்**, பண்ருட்டி, **திரு.பிரகாஷ் சிங்**, துத்திப்பட்டு, திரு.**தேசிங்,** மேலச்சேரி, **திரு.ஜெய் சிங்**, மேலச்சேரி, **திரு.கொளஞ்சிராம் சிங்**, மணலூர்பேட்டை, **திரு.குரு சிங்**, ராணிப்பேட்டை, **திரு.கோபிசிங்**, துத்திப்பட்டு, **திரு.ராம்கிஷண் சிங்**, ஒசூர், **திருமதி.தீபா பாய்**, மணலூர்பேட்டை, **திருமதி.நிர்மலாபாய்**, பொன்னங்குப்பம், **திருமதி.பவித்ராபாய்**, மேலச்சேரி ஆகியோர் மட்டுமல்லாமல் வளரும் வருங்கால பொந்தில் ராஜாபுத்திர வாரிசுகளான **Master.ஜகதீஸ்வர் சிங், Master.சாகித்யன் சிங்** ஆகியவர்க்கும் அமைச்சர் திரு.**செஞ்சி மஸ்தான்** அவர்களின் திருக்கரங்களால் பொன்னாடை போற்றி கௌரவித்தது மேலும் சிறப்பு.



இந்நிகழ்ச்சியில் விழுப்புரம் ஆட்சியர்இ கூடுதல் ஆட்சியர் அமைச்சர் **MLA. M.P** ஆகியோருக்கு இணையாக நமது நிறுவனரான திரு.**G.ஸ்ரீதர் சிங்** மற்றும் அவைத் தலைவர் திரு.**நாகேஸ்வர சிங்** அவர்களை மேடையில் அமரவைத்தும் நம் நிறுவனரை உரையாட வைத்ததும் நம் பொந்தில் இனத்திற்கே பெருமையாகும்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பொன்னங்குப்பத்தை சேர்ந்த திருமதி.**ஸ்வப்னா பாய்** திருமதி.**விஜயா பாய்** ஆகியோருக்கும் மற்றும் செஞ்சி ஜெயராம் சிங் அவர்களுக்கும் எங்களது நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்து மகிழ்கிறோம்.


## • with Best Compliments From •











## சேனாவின் நோக்கங்கள்

நம் சமுதாய மக்கள் அனைவரையும் ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடில்லாமல் ஒன்றிணைப்பது.

1. வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள நம் சமூகத்தினரின் வாழ்வாதாரத்திற்கு வழி வகுப்பது.உதவி செய்வது.
2. நமது சரித்திர சின்னங்களை பராமரித்து பாதுகாக்க உகந்த நடவடிக்கைகள் மேற்கொள்வது.
3. திருமணமாகி சில மனக்கசப்பினால் பிரிந்து வாழும் தம்பதியினரை ஒன்றிணைத்து வாழ அறிவுரை வழங்கி சேர்த்துவைக்க முயற்சிப்பது
4. இலவச கல்யாண கேந்திரா நடத்தி திருமணத்திற்காக காத்திருப்பவர்களுக்கு வரன்களை அமைத்துக் கொடுத்து வாழ்க்கையை வசந்தமாக்குவது
5. நம் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக அமைச்சர்களையும் அரசாங்க மேல் அதிகாரிகளையும் தொடரந்து சந்தித்து நல்ல தீர்வுகாண வலியுறுத்துவது வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள நம் சமுதாயத்தை சேர்ந்த மாணவ மாணவியருக்கு தேவையான உதவிகளை செய்து கல்வி பயலச் செய்வது வருங்கால நம் சந்ததியினர் நமது பண்பு, கலாச்சாரம், மரபு, மொழி மறவாமல் இருக்க ஆவண செய்ய வேண்டியது. போன்ற மிக முக்கிய நோக்கத்தோடு உருவாக்கப்பட்டதே

ராஜா தேசிங் ராஜ்புத் பொந்தில் சேனா !!!

## சேனாவின் விருதுகள் பெற்ற சிறப்பு வாய்ந்தவர்களின் பட்டியல்

### SENA AWARDEES:

**Best Politician Awards:**
Shri. S.INDER SINGH, DMK
Chairman-5th Zone, Tambaram
Shri. C.OMPODI PRASAD SINGH, AIADMK
Ex-Housing Board Committee Member
Shri. M.RAJARAM SINGH, INTUC Congress
Madurai
Shri. T.H.RANGAN SINGH, AIADMK, Thuttipet

**Best Educational Award:**
Dr. RAJARAM GOPAL SINGH, Pondy
M.Sc. M.A.(Psy)M.A.(Eng)M.Ed.M.Phil.PGDG & C.Phd.


**Best Teachers Awards:**
Smt. S.PUSHPA LATHA, M.A.B.Ed., Tiruchi
Smt. V.VIJIBAI, M.A.B.Ed., Kallakurichi

**Senior Citizen Awards**
Shri. L.CHANDRABHAN SINGH, Chennai
Shri. N.MUNNAR SINGH, Chennai
